Registered as a News Paper in Ceylon

P. M. G. No. H. A. 9/300 of 1953.

# இந்து சாதனம்

ஸ்தாபிதம் (1889) ஆவணி 28௳ ஆரம்பமானது

வெள்ளி தோறும் வெளி வருவது

தனிப்பிரதி:சதம் 10.

மாசில் வீணையும் மாலை மதியமும், வீசு தென்றலும் வீங்கிள வேனிலும், மூசுவண்டறை பொய்கையும் போன்றதே, ஈசனெந்தை யிணையடி நீழலே.

[புத்-எ௨] யாழ்ப்பாணம்:- சார்வரி௵ ஆவணிமீ ௧௰ வெள்ளிக்கிழமை (26 AUGUST. 1960) [இல-௨௧]

அரசியல் அலை

# திரு. கோனுர் இராசரத்தினவின் தீவிர திருத்தப் பிரேரணை

## இனப்பகைத் தீக்கு எண்ணெய்விடும் இயற்கைச் சுபாவம்

நன்றியுரைப் பிரேரணை விவாதத்தின்பொழுதுதான் நானுவிதமான கொள்கை விமரிசனங்கள் வெளியாகும் காட்சி காணப்படுவது. எத்தனையோ திருத்தப் பிரேரணைகள் நன்றியுரைப் பிரேரணைக்கு எதிர்க் கட்சிகளும் ஆட்சிக் கட்சியைச் சேராத ஆதரவாளர்களும் கொண்டுவந்திருக்கின்றனர். ஆனல் இனப்பகையை மூட்டுவதையே இயற்கைத்தொழிலாகக் கொண்டு உழைத்துவரும் திரு. இராசரத்தின கொண்டுவந்துள்ள திருத்தப்பிரேரணை உச்சத்திலே உரத்து நிற்கின்றது.

சுதந்திரக்கட்சியை இதயசுத்தமாக ஆதரிக்கிறேன் என்று சுற்றிச் சுற்றிப் பறைசாற்றி வந்த திரு. கோனுர் இராசரத்தின இப்பொழுது அக்கட்சியை விடப் பொல்லாத கட்சி இல்லையென்ற வகையிலே தூற்றி நிற்கின்றூர். எந்தக் காலத்திலும் எந்தக் கட்சியுடனும் இயைந்து நிற்கும் மனப்பான்மை இல்லாத இவரின் கூற்றுக்களை விசாரணை செய்வதற்குத் தனியாக ஒரு ஆணையாளர் குழு அமைக்கப்படுவது அத்தியாவசியமான தேவையாகின்றது.

இந்நாட்டிலுள்ள விஷம வெளியீடுகள் எல்லாம் ஒருங்கு சேர்ந்தாலும் திரு. இராசரத்தினவின் இனப்பகைச்சுவை நாவினின்றும் வெளியாகும் பழிமொழிகளின் கடுவிடத்துக்கிணையாகா, தினசரிப் பத்திரிகைகளை இல்லாதொழித்து, கூட்டு வணிக சங்கமூலமாகச் செய்தி வெளியீடுகள் தோற்றுவிக்க எண்ணும் திருமதி. சிறிமாவோ இந்த இராசரத்தின தம்பதிகளுக்கும் தடையுத்தரவு விதிப்பதறகு வழிவகை தேடாதிருப்பது விநோதமல்லவா!

### சொன்னதைச் சொல்லுமாங் கிளி

சிம்மாசனப் பேச்சின் சீரையும் சிறப்பையும் விளக்கித் திருமதி சிறிமாவோ வானெலிமூலம் கொடுத்த விளக்கம் சொன்னதைச் சொல்லுங் கிளியின் பழக்கத்தைப்போல இருக்கிறது. பத்திரிகைகளை எடுக்கும் அரசாங்கம், பாடசாலைகளை எடுக்கும் அரசாங்கம், என்று மறுபடியும் திருப்பி உரைத்ததைவிட ஏற்ற நியாயமோ ஏற்றுக் கொள்ளக்கூடிய விளக்கமோ பிரதமராற் கொடுபடவில்லை.

தேர்தற் பிரசாரத்திலில்லாத புதுயோசனைகளையே

## யாழ்ப்பாண இரஸிகரஞ்சன சபா

### 9-வது ஆண்டு இசைவிழா

யாழ்ப்பாணம் இரஸிகரஞ்சனசபாவின் ஆதரவில் நடைபெறும் 9வது ஆண்டு இசைவிழா சென்ற 24-8-60 புதன்கிழமை மாலை 5 மணியளவில் ஆரம்பமாகியது. இவ்விழா வண்ணை ஸ்ரீ வெங்கடேச வரதராஜப் பெருமாள் கோவில் முன்றிலில் அமைக்கப்பெற்ற விசேட பந்தலிலே தொடர்ந்து 5 தினங்கள் வரை நடைபெறும.

## நற்சிந்தனை

பாவம் போம் பொல்லாப்
பழிபோகும் பாருலகிற்
சேவற் கொடியோன்
றிருவடியைச் — சாமளவுஞ்
சிந்திப்பீர் செல்வஞ்
செறியிலங்கை நன்னுட்டீர்
வந்திப்பீ ரென்றும் மகிழ்ந்து.

(சிவ தொண்டன்)

## இலஞ்சக்குற்றச்சாட்டு ஏற்பட்டால்?

இலஞ்சக் குற்றச்சாட்டுக்களை விசாரணை செய்த ஆணையாளர் குழுவின் தீர்ப்பின்படி குருநாகற்றெருகுதி அங்கத்தவர் பாராளுமன்றத்திலிருந்து நீங்குவது முறையாகும் என்று சமசமாசக்கட்சி அங்கத்தவர் மக்கள் சபையிற் குறிப்பிட்டார். மந்திரியார் இலங்கரத்தின அந்தத் தீர்ப்பு இன்னும் மக்கள் சபைக்கு அனுப்பப்படவில்லை என்று சமாதானம் கூறினராம்.

## சோதிலிங்கத்திருத்தலம்

### வைத்தியநாத வழிபாட்டின் மகிமை

சிதம்பரம். ஆவணி. 8

வட இந்திய நாட்டில் 5-வது ஜ்யோதிர்லிங்க ஸ்தலமாகவுள்ளது "வைத்யநாதம்", இந்த வைத்யநாதம் ஜ்யோதிர்லிங்க ஸ்தலத்தில் குழந்தைகளுக்கு முடி இறக்குதல், மாவிளக்குப்போடுதல் முதலிய பலவிதமான பிரார்த்தனைகளை மக்கள் செலுத்திக்கொண்டு வருகின்றனர்.

ஆலயத்தின் அமைப்புகள்

ஆலயம் உன்னதமான பிரதேசத்தில் கட்டப்பட்டிருக்கின்றது, கோயில் கட்டட வேலைகளில் மரவேலைகள் மிகவும் அதிகமுள்ளன. மண்டபத்தில் ஒரு ஆள் அணைத்துப் பிடிக்க முடியாத அளவுக்குப் பெரியதாகவும், பனைமரத்தைப்போல் மிகவும் உயரமாகவுள்ள காட்டு மரத்தூண்கள் பல நிறுத்தப்பட்டிருக்கின்றன. இவ்வளவு உயரமான தூண்கள் பார்க்கவேண்டுமானல் செந்தமிழ்நாட்டில் தஞ்சை மாநகரில் விளங்கும் அரண்மனையில் மகாராஷ்ர மன்னரின் கொலு மண்டபத்திலேதான் இன்றும் காணலாம். இங்குள்ள ஜ்யோதிர்லிங்கப்பெருமானுககு அழகான இரத்தின கிரீடமும், திருத்தேர் விளக்கும் பார்ப்பதற்கு உரியனவாகவே காட்சி அளிக்கின்றன. ஆலயத்தில் உட்கார்ந்த நிலையில் பைரவமூர்த்தி மிகவும் பெரிய தோற்றத்துடன் காட்சி அளித்துக் கொண்டிருக்கின்றூர்.

புராண வரலாறுகள்

இராவணன் கயிலாய மலைக்குச் சென்று சாமகானத்தால் சிவபெருமானை மகிழச்செய்து, அவரிடமிருந்து ஆத்மலிங்கத்தைப்பெற்று இலங்கைக்கு அதனைத் தூககிச்செல்ல முற்பட்டான், இலிங்கம் சிரசிலேதாங்கி எடுக்கப்பட முடியாதபடி. மிகவும் பெரிதாக இருந்தது. மறுமுறையும சிவபெருமானைவணங்கி இந்தஇலிங்கத்தைச்சுமந்து செல்லத் தனக்கு உதவி புரிந்தருளல் வேண்டுமென்று வேண்டினன் கருணமூர்த்தியாகிய கயிலாயபதி அந்த இலிங்கத்தை இரண்டு கூறுகச் செய்து காவடியில் வைத்துத் தூக்கிச் செல்லும்படி கட்டளையிட்டார், இராவணன் அவ்வாறே காவடியில் இரு கூறுகவுள்ள இலிங்கங்களை வைத்துத் தூககிக்கொண்டு வரும்பொழுது இந்தத்தலம் வந்தவுடன் இராவணன் சலஉபாதியினல் அவதிப்பட்டான், இலிங்கததைக் கீழேவைக்கக் கூடாததாலும, வைத்துக்கொண்டே சலவிமோசனம்செய்ய லாகாததாலும் வருந்தி நாற்றிசையும் சுற்றிப் பார்த்தான் அதுசமயம் விநாயகப்பெருமான் அங்கே அந்தணச் சிறுவனக வேடந் தாங்கி வந்தார். அந்தச் சிறுவனிடம் காவடியைக் கொடுத்து வைத்திருக்கச் சொல்லிச்சென்றூன், இராவணன் சென்றவுடன் சிறுவனுகிய விநாயகப் பெருமான் காவடியைக் கீழே

## சமயமென்று சாற்றுவது எப்படி?

நாம் பார்க்கும் உலகம் மிகவும் பரந்தது நடப்பனவும், ஓரே இடத்திலிருப்பனவும் என்ற இருவகைப் பொருள்கள் நிலத்திலுள்ளன. மக்கள் அறிவின் மாண்புடையர். அம்மக்களும் தேசந்தோறும் பலவித வேறுபாடுடையர் கடவுட்கொள்கை அற்றோரைப்பற்றிக் கவலை இல்லை. ஒரு நாமஞ்சூட்டி வழிபடும் மக்களைப்பற்றிப் பேசுவது பிழையின்று. பிழைநெறிச் சென்று நமது நாட்டவரோ அயல் நாட்டவரோ அதோகதி அடைவது விரும்பற்பாலதன்று. ஒரு சமயத்தைப் பிளவு செய்யாது நிலையாக அதன் இறைவரை வழிபாடு செய்வது மரபாகும். இப்போது காணப்படுவது பிழையாக இல்லையே! சைவம், வைஷ்ணவம், சாத்தேயம், கௌமாரம், கிறீஸ்தவம், மகமதியம் என்பது முதலிய சமயங்களை அன்பர்களே கவனியுங்கள்!

சைவம் சிவ சம்பந்தமானது. சிவம் மங்கலகரமானது. வைஷ்ணவம் விஷ்ணு சம்பந்தமானது, சாத்தேயம சத்திசம்பந்தமானது, கௌமாரம் குமரக்கடவுள் சம்பந்தமானது. இப்படியே வகுத்த நூல்களுமுண்டு. அத்தகைய முறையில் வழிபட்டு உயர்கதி பெற்ருரும் உளர். காலந்தோறும் மக்களின் பண்பு மாறுபடும். கடவுள் ஓரே பெற்றிததாகவே இருப்பர். கிறீஸ்தவர்கள், மகமதியர் முதலியோர்

தமிழ்ப்பண்டிதர் பிரம்மஸ்ரீ வ மு. இரத்தினேசுவரஐயர்

புதுப்பேர் கண்டதாகத் தெரியவில்லை. சைவசமயிகளும் பல்லாயிரமாண்டுகள் சென்றும் சைவம் என்ற பேரை மாற்றவில்லை. "சிவனெனும் நாமந் தனக்கேயுடைய செம்மேனி யெம்மான்" என்றும்; சிவ சிவ என்கிலர் தீவினையாளர்'' என்றும வருவனகாண்க. என் வந்த பெரியார் பாடலைப் பாருங்கள்.

"சைவத்தின் மேற்சமயம்
வேறில்லை அதிற் சார்சிவமாம்
தெய்வத்தின் மேற்றெய்வம்
இல்லெனும் நான்மறைசேர்
மைவைத்த சீர்திருத்
[illegible]
நால்வர்பொற்ருளெம்முயிர்த்
துணையே''

என்று பாடியெடுத்து ஆன்ரோர் பரவினர். சைவம் என்றபேரை மாற்றுவதால் மக்கள் நற்பயன் பெறமுடியாது.

சிவபிரானையோ அன்றி அப்பெருமானின் வேருகாத மூர்த்தங்களையோ நாம் வழிபாடு செய்தால் குறித்த மூர்த்தவாயிலானே நாம் ப்பறுவதே அருளாகும். அருள் என்பது ஒரு முதல் வரையின்றி அடைதற்பயத்ததன்று. சிவ என்பது வடமொழி. அதனைக் கூறநாவெழாது அருள் என்ற பதத்தை உச்சரிப்பது, எழுதுவது குருடன் கோலின்றி நடக்கமுயன்றதையொக்கும். சிவநாமமே சைவ நூல்களெல்லாவற்றிலு முள்ளது. சைவ சித்தாந்தமே சைவ சமயிகள் கைக்கொண்ட நெறி. சமயதீக்கைபெற்றுச் சிவ மூல மந்திரமே சைவ சமயிகள் செபிக்க வேண்டியது, பஞ்சாட்சரத்தின் துணையிருந்தால் பாவசாகரததை நீக்கிவிடலாம், பேர் தெரியாது "அது சுட்குத்தா" என்று ஆண்மகன் பெண் மகளைக்கேட்டவாறு வழிபடுதல் கூடாது, தலைவராகிய சிவபிரானைக்குறிக்கு [illegible]

குறிப்பிடவேண்டும் என்று புதிய அரசியற் பிரமாணமும் வகுக்கின்ரு திருமதி. சிறிமாவோ. எல்லாககூற்றுக்கும் ஏற்றமாயிருக்கும் கட்சிப்பலம் நல்லாய் இடங்கொடுக்கும் பொழுது திருமதி சிறிமாவோ [illegible] செய்ய முற்பட முடியும்?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருச்சிற்றம்பலம்
வாழ்க அந்தணர்வானவர்ஆனினம்
வீழ்க தண்புனல் வேந்தனுமோங்குக
ஆழ்க தீயதெல்லாம்அர னாமமே
சூழ்க வையகமுந் துயர் தீர்கவே.
திருச்சிற்றம்பலம்


# இந்துசாதனம்

சார்வரி௵ ஆவணி௴
௰௧௨ வெள்ளிக்கிழமை


## அடிப்படை உரிமைகள் அகற்றப்படுகின்றனவா?

மக்களின் கல்வி முறையைப்பற்றி மேதாவிகள் உலகெங்கணும் ஒரே ஒரு கருத்தையே உரைத்திருக்கின்றனர். இறைநெறி நிற்கக் கற்பிக்கும் கல்வியே கல்வி என்று சுருங்கச் சொல்லுதும். ஒவ்வொரு மதத்தவர்களும் அவ்விதமான கல்வியைச் செவ்வனே அளிப்பதற்கு அரிது முயன்று வந்திருக்கின்றனர் வருகின்றனர். இந்த உண்மையை இலங்கைச் சுதந்திரக்கட்சியும் மறுக்க முடியாது. முதலமைச்சர் திருமதி சிறிமாவோ பண்டாரநாயகவும் மறைக்க முடியாது.

கும்பலிலே கோவிந்தாப் போடுகிறவர்களின் நம்பிக்கையான ஆதரவு இருக்கின்றது; எந்தவிதமான சட்ட திட்டங்களைக் கொண்டுவந்தாலும் அடுத்து ஐந்தாண்டுகளுக்குச் சுதந்திரக்கட்சி ஆட்சி அசையாது நிற்கும் என்ற இறுமாப்புடன் கல்விக் கழகங்கள் அனைத்தையும அரசாங்கம் எடுத்து நடத்தும் முடிவைச் செய்கைமுறையில் நிகழ்த்தியே வைப்போம் என்று ஆளுங்கட்சியினர், இதனல் என்ன சூழும் என்று ஆராயாது, எண்ணுது துணிந்திருக்கின்றனர். பாராளுமன்றத்திலே மக்கள் சபையிலே அநுபவம் மிக்கவர்களும் கல்வித்துறையில் ஈடுபட்டவர்களும் 'எடுத்து நடத்தும்' (Take - over) கொள்கையை இயன்றளவு எதிர்த்திருக்கின்றனர். பாராளுமன்றத்தில் எதிர்ப்புமட்டும் போதாது. நாடு முழுவதிலும் நன்மக்கள் தங்கள் கருத்துக்களையெல்லாம் அழுத்தந்திருத்தமாக எடுத்துக் கூற வேண்டிய தவசியம்.


'வாழ்த்த வாயும்
நினைக்க மடநெஞ்சும்
தாழ்த்தச் சென்னியுந்
தந்த தலைவனை
சூழ்த்த மாமலர் தூவித்துதி'க்கும்

வாழ்க்கை நெறியை வகுத்துக்காட்டும் கல்வியை மத சங்கங்கள் நிறுவி நடாத்தும் கல்விக்கழகங்களன்றி அரசினர் பள்ளிக்கூடங்கள் உரிய முறையில் ஊட்டுவிக்க முடியுமா?

சைவக்கல்லூரிகளை எடுத்துப் பேசும்பொழுது, காலையிற் கழகத்துக்குரிய கோயிலில் வழிபட்டு, வெண்ணீறணிந்து, திருமுறை ஓதிக் கலவிபயிற்றல் ஆரம்பமா... சைவ சமயம்

## துப்பறியும்சுப்புமாமா

### அடுப்படியை எடுத்துப் பார்க்கட்டும்




சுப்புமாமா காலத்தோடு சுழல்கின்றவரல்லவா. அரசாங்கம் எடுக்கின்றதாம் பள்ளிக்கூடங்கள் பலவற்றையும் என்ற கதை பரம்பினதும் மாமாவுக்கு ஒரு யோசனை தோன்றினது. ஏதோ பிழை நடக்கிற தொழிலைத் தானே அரசாங்கம் எடுத்து நடத்தி, மக்களுக்கு உதவிசெய்ய எண்ணுகிறது. ஆணும் பெண்ணும் அனைத்திலு' சரி என்ற கொள்கை கடைமுறையில் வந்த பிறகு அடுப்படியிற் சமையல்முறை அடியோடு கெட்டுவிட்டதே. ஒரு நாளைக்கு உப்புக் குறைவு, ஒருநாளைக்குப் புளிகூட; ஒருநாளைக்குப் பச்சைத் தண்ணீர்போல உரிசியில்லை என்றேன் • ஆண்கள் பாடுபடவேண்டும்.

இந்த அடுப்படி அலுவலை அரசாங்கம் எடுத்து மக்களுக்கு உதவி செய்தால் என்ன என்று அடுத்த வீட்டிலிருக்கும் பாராளுமன்றத்து அங்கத்தவரைச் சுப்புமாமா பேட்டி கண்டு பேசி முடிவெடுத்திருக்கின்றாராம் — அடுப்பு நெருப்பும் போய் வாய்ப் பொரியும் போன வகையில் வருமோ என்றும் சுப்புமாமாவுக்கு ஒரு சந்தேகம் உண்டு,

## இன்னும் ஒரு மாற்றம்

க்ட்டாயமாக ஓய்வுபெறும் வயது, அரசாங்க சேவையில் இதுவரையும் 60 ஆக இருந்தது. இனி 55 வந்ததும் கட்டாயமாக உத்தியோகத்தர்கள் ஓய்வுபெறச் செய்வதற்குச் சட்டம் திருத்தப்படக்கூடும் என்று அறியக்கிடக்கின்றது.

பாடமாக ஒரு வகுப்பு நடக்கின்றது. மாலையிலே மறுபடியும் தேவாரபாராயணத்துடன் மாணுக்கர்கள் பாடசாலையினின்றும் இல்லஞ் செல்வார்கள். அவ்வளவில் நிற்கவில்லை, சமயகுரவர்கள், திருத்தொண்டர்கள், சைவப்பெரியார்கள் ஆகியவர்களின் தினங்களிலும் சிவராத்திரி, நவராத்திரி, திருவாதிரை, திருக்கார்த்திகை, கந்தசட்டி, விநாயக சட்டி என்றவகையிலுள்ள பலப்பல புண்ணிய நாட்களிலும் விசேட சமயக் கிரியை ஒழுங்குகளிலே மாணுககர்கள பங்குபற்றுவார்கள்.

மிக முக்கியமாச் சமய தீக்கை ஒவ்வோராண்டும் மாணுக்கர்கள் ஆசிரியர்கள் பெறுவார்கள். தொகுத்துக்கூறுகின் இறைநெறி இலங்கும் வாழ்க்கையை இயக்கும் கருவியாகவே கல்விக் கழகம் அமைந்திருக்கின்றது. இத்தகைய புனித புண்ணிய நிலையத்தைப் பலருங்கூடிப் பலதும் பேசும் பொதுப்பாடசாலையாக்கிவிட்டால் விளைவது என்ன என்று கேட்கின்ருேம். சைவ சீலர்களே நன்மக்களே சிந்தித்துப் பாருங்கள்.

பிணியெலாம் வரினு மஞ்சேன்
பிறப்பினே டிறப்பு மஞ்சேன்
துணிநிலா அணியி னுன்றன்
தொழும்பரோ டழுந்தி யம்மால்
திணிநிலம பிளந்துங் காணுச்
சேவடி பரவி வெண்ணீ
றணிகிலா தவரைக் கண்டா
லம்மநா மஞ்சு மாறே,

தமிழக வரலாறு

## கம்போடியாவிற் சைவ முதன்மை

### சிவலிங்கம் முதலிய திருவுருவங்களும் ஆச்சரியந்தரும் அழிபாடுகளும்

29. கம்போடியா

இப்பொழுது கம்போடியா என வழங்கும் நாடு முற்காலத்தில் கம்போகம் எனப்பட்டது. தென்னிந்தியாவினின்றும் சென்ற கௌண்டினியன் என்னும் பிராமணர் நாகினி சோமா என்னும் பெண்ணை மணந்து கி. பி. முதல் நூற்ருண்டில் அரசனுனர் எனப்பழங்கதை வழங்குகின்றது. கி. பி முதல் நூற்ருண்டு முதல் தென்னிந்திய மக்கள் கம்போடியாவில் குடியேறினர்: பல்லவ எழுத்தில்

திரு. ந. சி. கந்தையாபிள்ளை

பொறிக்கப்பட்ட பல சாசனங்கள் அங்கு கிடைத்துள்ளன வைணவம் பௌத்தம் என்னும் மதங்களிலும் பார்க்க சைவமதமே அங்கு முதன்மை பெற்றிருந்தது கோயில்களில் காணப்படும் சிற்பங்கள் இதிகாசங்கள் சம்பந்தமானவை. பவவர்மன் என்னும் அரசன் நான்கு சிவாலயங்களைக் கட்டுவித்து மறு கோயில்களிலும் பல சிவலிங்கங்களைப் பிரதிட்டை செய்தான். கம்போதிய அரசர் வர்மன் என்னும் பெயர் புனைந்து முடிசூட்டினர். பல்லவ அரசரும வர்மன் என்னும் பெயர்பெற்றிருந்தனர். பவவர்மன் 616-இல் கம்பீர வர்ணர் என்னும் சிவலிங்கத்தை நாட்டி வழிபட்டான். பிசார், சினெங், கராபி முதலிய இடங்களில் உமையொடு இடபத்தில் வீற்றிருக்கும் சிவன் உருவங்கள் காணப்படுகின்றன. இடபத்தில் வீற்றிருக்கும் சிவன் வடிவத்திலும பார்க்க நடராச வடிவமே மக்களால் பெரிதும் வழிபடப்பட்டது. சூரியவர்மன் என்னும் அரசன் பன்னிரண்டாம் நூற்ருண்டில் அங்கோவரம் என்னும் சிறந்த திருமால கோயிலைத் தென்னிந்திய சிற்ப முறையிற் கட்டினன்.

(வளரும்)

## ஸ்ரீ கணேச வித்தியா விருத்திச் சங்கத்தின் 27-ம் ஆண்டு நிறைவு விழா

"சைவம் வேறு - சமுதாயம் வேறு என்ற உணர்வு இன்றைய சைவப் பெருமக்களிடத்து இருப்பது வருத்தத்துக்குரியதொன்ருகும். தமக்குப் பின் வாழப்போகும் ஒரு சமுதாயம் இருக்கிறதென்ற எண்ணம் நம்மிடை வளர வேண்டும். பரந்த விரிந்த மனப்போக்கும் சமரச உணர்வும் தமிழ்மக்களது பரம்பரைச் சொத்தாகும் காலத்தோடு சேர்ந்து வரும் சில மாற்றங்களை நாம் முற்ருகத் தள்ளிவிட முடியாது; அவற்றையும் சீர்தூக்கிப் பார்த்து அன்பு வாழ்வு மலர - அருள் வாழ்வு சிறக்க உதவுமாகில் அவற்றைக் கடைப்பிடிக்கப் பின்நிற்கக்கூடாது"

இவ்வாறு யாழ். நல்லூர் ஸ்ரீகணேச வித்தியா விருத்திச்சங்கத்தின் 27-ம் ஆண்டு நிறைவு விழாவில் சொற்பெருக்காற்றிய திருவண்ணுமலை ஆதீனத் தலைவர் குருமகாசந்நிதானம் தவப்பெருந்திரு. குன்றக்குடி அடிகளார் "சைவம் கண்ட சமுதாயம்" என்னும் பொருள்பற்றிப் பேசும்போது குறிப்பிட்டார்கள்.

இவ் விழா நல்லூர் ஸ்ரீ கணேச வித்தியா விருத்திச் சங்கமண்டபத்தில் சென்ற 25-8 60 வியாழக்கிழமை மாலை 7 மணியளவில் யாழ்ப்பாணம் சைவபரிபாலனசபைத் தலைவரும், முடிக்குரிய நியாயவாதியுமாகிய திரு. த. முத்துச்சாமிப் பிள்ளை அவர்களின் தலைமையில் நடைபெற்றது.

குருமகா சந்நிதானம் அவர்கள் தொடர்ந்து பேசும்போது, சைவ சித்தாந்தத்தின் உயர்ந்த கருத்துக்களை விளக்கிவிட்டு சைவ ஆலயங்களிலே நடைபெறும் வழிபாடுகளில் திருமுறைகளையும், அருட்பாடல்களையும் அதிகமாகப் பயன்படுத்தவேண்டும், வழிபட வரும் மக்களது நெஞ்சத்திலே ஒரு அருளியற் கிளர்ச்சியை எழச் செய்யும் வகையில் காதலாகிக் கசிந்து கண்ணீர்மல்கி இறைவன் புகழைப் பாடி நாம் நற்கதிபெற முனைய வேண்டுமென்றும் குறிப்பிட்டார்கள். அடுத்து பிரம்மஸ்ரீ T. K. சீதாராம சாஸ்திரிகள் "விநாயகபரத்துவம்" என்னும் பொருள் பற்றி அரியவிரிவுரை நிகழ்த்தினார்கள். விழாவுக்கு ஆண்களும் பெண்களும் சிறுவர்களுமாக ஏராளமானோர் சமுகமளித்தனர். தலைவர் குறிப்புரையுடனும் திரு. வ. கிருஷ்ணர் அவர்களுடைய நன்றியுரையுடனும் விழா பூர்த்தியாயது.

—"நாதன்"

## ஆசாரியாபிஷேகம்

நிகழும் சார்வரி௵ ஆவணி௴ 18௳ (2-9 60) சுக்ரவாரம் காலை 10 மணியளவில் வேதாரணியம் ஸ்ரீதவாரச் செல்லையாக் குருக்கள் அவர்களது பேரனும் ஸ்ரீமத். செ. சோமாஸ்கந்தக் குருக்கள் அவர்களது புத்திரனுமாகிய சோ. ஆறுமுக தேசிகருக்கு தொல்புரம், பாணுவெட்டி மானுமுதலியார் மடத்தில் ஆசாரியாபிஷேகம் நடைபெறும என அறிகின்ருேம்.

## தெய்வநெறிக்கழக வெள்ளி விழா

ஆவணி௴ 12௳ (27-8-60 சனிக்கிழமை மாலை 6 - 30 மணி தொடக்கம் வயாவிளான் மானம்பராய்ப்பிள்ளையார் கோவிலில் இலங்கை திவ்விய ஜீவன சங்கங்களின் போஷகர் யோகிராஜ் சச்சிதானந்த சுவாமிகள் தலைமையில் இவ்விழா நடைபெறும்.

## நடுக்கடலிற் படகு விபத்து

தென் இந்தியக் கரையிலிருந்து வட இலங்கைக்குக் கள்ளமாகத் தோணியில் வந்தவர்களிலே பதினெண்மர் கடலில் மூழ்கி உயிர் துறந்தனரென்றும், பலரை இன்னும காணவில்லை என்றும், மூவரே நீந்திக் கரையேறினர் என்றும் செய்தி சொல்கின்றது.

படகு மன்னுர்க்கரைக்கு ஒருகட்டை தூரத்திற்கப்பால் வந்து சேர்ந்ததும் பிரயாணிகளைக் கடலிற்குதித்து நீந்திக் கரையேறும்படி சட்டளை பிறப்பிக்கப்பட்ட தென்றும், அப்பால் அவர்கள் அத்தனை பேரும் கடலுக்குள்ளே தள்ளப்பட்டனரென்றும் செய்தி கூறுகின்றது,

## நல்லூர் வடக்கு ஜனசமூக சேவாசங்கம்

ஷை சங்கத்தின் 10-ம் வருடாந்த நிறைவுவிழா நிகழும் சார்வரி௵ ஆகஸ்ட்௴ 25-8 60 வியாழக்கிழமை முற்பகல் 10 மணியளவில் ஸ்ரீ கணேச வித்தியா விருத்திச் சங்கத்தலைவர் ஸ்ரீமான். சி. சோமசுந்தரம் அவர்களின் தலைமையில் நடைபெற்றது.

## பழைய பிரதமர் படுகொலை செய்யப்பட்டநாள்

முன் முதல் அமைச்சராயிருந்து படுகொலை செய்யப்பட்ட திரு. பண்டாரநாயகதினயாக அந்நிகழ்ச்சி நடந்த புரட்டாதி 25 ஐ விடுதலை நாளாக்க முயற்சி நடைபெறுகின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பெறுதற் கரியது மானிடப்பிறவி

## பிறவிப்பெரும் பயனடைதற்குச் செய்ய வேண்டியது என்ன?

"அகழ்வாரைத் தாங்கும்
நிலம்போலத் — தம்மை
இகழ்வாரைப் பொறுத்தல் தலை"

என்னும் தமிழ்மறை உவமைக்கு இலக்கியமாக அமைந்தவள் தாய். நிலத்துக்கு எத்துணை கொடிய இன்னல்களைச் செய்தாலும் அது பயன்கருதாது பெரும் பயனைத் தருகின்றது. அதே போன்று தாயானவளும் தன் பிள்ளை எத்துணை கொடிய துன்பத்தைக் கொடுக்கினும் பயன்கருதாது அப்பிள்ளையின் நலத்தில் பங்கு எடுக்கின்றாள். பொறுமையே வடிவமாக அமைந்தவள் தாய். அவள் தியாகத்தின் சின்னம், அன்பின் இருப்பிடம் தாய் அன்புக்கு ஈடாக இவ்வுலகில் யாது உண்டு? பலவிதத்திலும் தொந்தரவு கொடுக்கும் ஒரு சீவனை ஒரு தினமல்ல, இரு தினமல்ல பலநூறு தினங்களாக திருவயிற்றிலே வைத்துக்காக்க எவ்வளவோ பொறுமை எவ்வளவோ கருணை வேண்டும்.

இத்தகைய தாயிலும் கூடிய அளவில் அன்பு உடையவன் இறைவன். தாய் தன் பிள்ளை எவ்வளவு கெட்டவனுகை இருப்பினும் அப்பிள்ளையை வெறுக்கமாட்டாள். அதே போன்று இறைவனும் தன் அன்பன் எவ்வளவு குற்றங்களைச் செய்தாலும் தன் கருணையால் அவற்றைப் பொறுத்தருளும் தன்மை உடையவர். இதனாலன்றோ மகான்கள் இறைவனைத் தாயாகவே போற்றி இருக்கின்றார்கள்.

"தாயாகித் தந்தையுமாய்த் தாங்குகின்ற தெய்வம்" என்கின்றார் வள்ளலார்.

"தாயினும் நல்ல
தலைவரென்றடியார்
தம்மடிபோற்றிசைப்பார்கள்"

என்கின்றார் திருஞானசம்பந்தப்பெருமான்.

"என்தாயு மெனக்கருள் தந்தையும் நீ" என்கின்றார் அருணகிரியார்.

"அன்னே உன்னையல்லால் இனியாரை நினைக்கேனே" என்று துதிக்கின்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

வேண்டுவார் வேண்டுவதை ஈயும் இறைவன் தன் அன்பர் வேண்டுபவற்றை வரையாது வெகுளாது வழங்குந்தன்மையுடையவன்.

மணிவாசகப் பெருமான் இறைவனோடு ஐக்கியப்பட்டு அவர் அன்பை நேருக்கு நேராக அனுபவித்தார். பாண்டியனின் பணத்தை இறைவனுக்கு அர்ப்பணித்தார். இதை அறிந்த பாண்டியன் வெகுண்டான். கொடிய தண்டனைகள் கொடுத்தான். இதைக்கண்ட இறைவன் திருவுளம் இரங்கினார். நரியைப் பரியாக்கினார். பின்பு பரியை நரியாக்கினார். மணிவாசகருக்காக வைகையாற்றைப் பெருகச்செய்தார். தன் மேல் அன்புகொண்ட செம்மனச்செல்வியின் பிட்டுக்குக் கூலியாளாகச் சென்றார் தனக்குக் கொடுக்கப்பட்ட வேலையைச் செய்யாது விளையாடினார் இதைக்கண்ட அதிகாரிகள் அவரது திருமேனியில் பிரம்பால் அடித்தார்கள். அந்த அடி தேவர் முனிவர் அனைவர்பாலும் பட்டது. இவை அனைத்தும் இறைவனில் மணிவாசகர் கொண்ட அன்பு காரணமாக நிகழ்ந்தவன்றோ.

இறைவனது அன்புக்கு உவமை தேடிய மணிவாசகருக்கு தாய் தாம் அகப்பட்டார். அதிலும் சிறந்த உவமை தேட முடியாதல்லவா? இதனால,

"பால் நினைந்தூட்டும்
தாயினும் சாலப்
பரிந்துநீ பாவியேனுடைய
ஊனினை உருக்கி
உள்ளொளி பெருக்கி
உலப்பிலா ஆனந்தமாய
தேனினைச் சொரிந்து
புறம்புறந் திரிந்த
செல்வமே சிவபெருமானே
யான் உனைத் தொடர்ந்து
சிக்கெனப் பிடித்தேன்
எங்கெழுந்தருளுவதினியே'

என்று தன்னை மறந்து இறைவன் வசப்பட்டுப் பாடுகின்றார். குழந்தை தன் பசியைத் தான் உணராத காலத்தும் தாய் குழந்தையின் பசியைத் தன் பசியாக உணர்ந்து தீர்க்கின்றார் அல்லவா? ஆதலால் பால் நினைந்தூட்டும் தாய் அன்பின் சிகரமாகிறாள். அத்தகைய தாயினும் மேலான பரிவுடையவர் இறைவன். அன்பர் தமக்குரிய குறைகளை உணர்ந்து வேண்டத்தொடங்கு முன்பே அவற்றை அறிந்து நீக்க முயல்வான். வேண்டத்தக்கதை அறிவோனும் வேண்ட முழுவதும் தருவோனும் அன்றோ! சில அன்பர்கள் தமதுகுறையை நனகுணர்ந்து ஆற்றாது இரக்கவும் மறப்பர் மறக்கினும் இறைவன் அதனை மறவாது நினைந்து செய்வார்,

செல்வி: சோ. சரஸ்வதி,
சரவணை

இறைவனின் அன்பனாகிய திருநாவுக்கரசர் சமணரால் எத்துணை கஷ்டப்பட்டார். இறைவனின் அன்பரல்லவா? இறைவன் அருளால் திருப்பரக்களைப் பாடினார். எரிபோன்ற துன்பமும் குளிர்ந்தது. அப்பர் சுவாமிக்கு இது எதனால் நிகழ்ந்தது? இறைவனில் கொண்ட அன்பு காரணமாகவன்றோ?

வேடுவனாகிய கண்ணப்பன் இறைவனில் கொண்ட பேரன்பு காரணமாக என்ன செய்தார். வேட்டையாடிய இறைச்சியை அர்ச்சனையாகப் படைத்தார். தனது கண்ணை எடுத்து இறைவனது கண்ணில் ஒட்டினார். கண்ணப்பன் இறைவனில் கொண்ட அன்பு காரணமாக நிகழ்ந்ததன்றோ இது?

அன்பர் குற்றமே செயினும் குணமெனக்கொள்ளும் கொள்கை உடையவன் இறைவன். சுந்தரர் மீண்டும் மீண்டும் பல குற்றங்களைச் செய்தார். எக்குற்றம் செய்யினும் இறைவன் குணமாகவே கொள்வார் என்பதும் அவர் அறிந்தவொன்றே. அதை விளங்கியபடியால்தான் மன்னிக்க முடியாத பிழைகளைத் தாம் செய்ததாக ஒப்புக்கொள்ளுகின்றார்.

"கள்ளமே பேசி
குற்றமே செயினும்
குணமெனக் கொள்ளும்
கொள்கையால் மிகைபல
செய்தேன்"

என்று பாடுகின்றார். சுந்தரர் எம்பிரான் தோழரல்லவா? மிடுக்கோடு பிழை செய்வார். மன்னிக்கும்படி மிடுக்கோடு கேட்பார், குழந்தை மேலே தந்தைக்கு எவ்வித அன்பு இருக்குமோ இறைவனுக்கும் அவ்வித அன்பு சுந்தரர் மேல் இருந்தது. "நான் எனது என்ற அறிவிலாது ஓடி ஓடி விழுந்தொறும் எடுக்கும் அப்பன்" அல்லவா இறைவனாகிய குருநாதன். அவன் கருணையே கருணை.

மனிதன் பிறக்கிறான் ஏன்? இறக்க. இறக்கின்றான் ஏன் பிறக்க; பிறப்பு, இறப்பு மாறிமாறி ஒரு வட்டத்துள் அமைவன. பிறந்து என்ன இன்பம் கண்டான்; ஒன்றுமில்லை. பிறப்பின் துன்ப நிலையை பல பிறவிகளில் அனுபவித்தும், அதினின்றும் விடுபட இன்னும் முயற்சிக்கின்றான் இல்லை மனிதன். இவ்வுலக இன்பங்களை விடுதது, இவ்வுலக ஆசைகளை இறைவன்பால் செலுத்துதலே மேலான முறை.

"பிறவிப் பெருங்கடல்
நீந்துவர் நீந்தார்
இறைவனடி சேராதார்"

என்கின்றார் வள்ளுவப்பெருந்தகை.

கருணைக்கடலாய், வேண்டுவார் வேண்டுவது ஈயும் இறைவனை மெய்யன்புடன் உள்ளம் உருகி வழிபட்டால் எமது துன்பம் நீங்காதா, வேண்டும் வரம் கிட்டாதா? கட்டாயம் கிட்டும். மனிதன் பட்டம் பதவியில் மோகம்கொண்டு படித்தால் போதுமா? இறைவனை வழிபட வேண்டுமே, இந்த உண்மையை வள்ளுவப் பெருந்தகையும்,

"கற்றதனா லாய
பயன் என் கொல் வாலறிவன்
நற்றாள் தொழா ரெனின்"

என்று வலியுறுத்துகின்றார். மனிதன் துன்பத்தில் இருந்து விடுபட்டு பேரின்பம் அடைய இறைவனிடம மறவாத அன்பு வேண்டும். அப்போதுதான் மனிதப்பிறப்பின் நோக்கமும் நிறைவேறும். இதனாலன்றோ,

இறவாத வின்பவன்பு
வேண்டிப்பின் வேண்டுகின்றார்
பிறவாமை வேண்டும் மீண்டும்
பிறப்புண்டேல் உன்னை யென்றும்
மாறவாமை வேண்டு மின்னும்
வேண்டும் நான் மகிழ்ந்து

இறைவா நீ யாடும்போ
துன்னடியின்கீழிருக்கவென்றார்

என்றபடி காரைக்காலம்மையார் வேண்டுவாராயினர்.

ஆகையால் பிறந்து, இறந்து மேலும் பிறந்து பல பிறவிகளிலும் இடருற்று உழலும் நாம் பெறுதற்கரிய இம் மனிதப்பிறவியில் இறைவனை வணங்கி அன்பு பூண்டு, பேரின்பமடைவோமாக!

——

# ஸ்ரீ அபிராமி அம்பாளுக்குப் புஷ்பாஞ்சலி வழிபாடு

சிதம்பரம் ஆகஸ் 8

திருக்கயிலாயபரம்பரைத் தருமபுரம் ஆதீனம் 25வது குருமகாசந்நிதானம் ஸ்ரீலஸ்ரீ கயிலை சுப்பிரமணியதேசிக ஞானசம்பந்தபரமாசாரியசுவாமிகள் ஆதீனத்திற்குச் சொந்தமான தேவஸ்தானமாகவும் தஞ்சை சரபோஜி மகாராசாவுக்கு ஸ்ரீ அபிராமி பட்டர் அமாவாசைத் தினத்தை பௌர்ணமை தினம் என்று கூறியதை மெய்ப்பித்துக் காட்ட வேண்டி ஸ்ரீ அபிராமி அம்பாள்மீது அபிராமி அந்தாதியைப் பாடி சந்திரனை அமாவாசை தினத்தன்று தோன்றும்படிச் செய்துள்ள தலமாகவுள்ள திருக்கடவூர் ஸ்ரீ அபிராமி அம்பாளுக்குச் சென்ற ஆடிமீ 3வது வெள்ளிக்கிழமை பெரும் பொருள்செலவில் அபிஷேகங்கள்செய்து அம்பாளின் கழுத்துவரை நறுமணமுள்ள புஷ்பங்களை நிரப்பி வழிபாடுகள்செய்துகொண்டார்கள்,

ஸ்ரீலஸ்ரீ கயிலை குருமகாசந்நிதானம் அவர்கள் கயிலாயமலை தரிசனத்திற்குச் சென்றிருந்தபோது அங்கு இறைவனைக் கீதாஞ்சலி செய்து வழிபட்டார்கள். பின்னர் கன்யாகுமரியிலுள்ள குமரி அம்மையை மேற்கண்டமுறையில்புஷ்பாஞ்சலி செய்து வழிபட்டார்கள்.

சென்ற ஆடி 2 வது வெள்ளி அன்று ஆதீனத்திலுள்ள ஸ்ரீ மகாலட்சுமி துர்க்கா அமபாளையும் 3வது ஆடி வெள்ளியன்று திருக்கடவூர் ஸ்ரீ அபிராமி அம்பாளையும் புஷ்பாஞ்சலிகள் செய்து வழிபாடுகள் செய்துள்ளதும் குறிப்பிடத்தக்கதாகும்.

(திரு. மா. பா. தினமணிநிருபர்)

# கொழும்புத் தமிழ்ச் சங்கம்

திருவள்ளுவராண்டு 1991 ஆவணித் திங்கள் ஐந்தாந் தேதி (20-8-60) திரு. கோ. ஆழ்வாப்பிள்ளை அவர்கள் தலைமையிற் கூடிய கொழும்புத் தமிழ்ச் சங்கத்தின் பதினெட்டாவது ஆண்டுப் பொதுக்கூட்டத்தில் கீழ்க்காணப்படுவோர் ஆட்சிக்குழு முதலியனவற்றிற்கு நியமிக்கப்பட்டார்கள்.


காப்பாளர். சேர். கந்தையா வைத்தியநாதன், துணைக்காப்பாளர்கள்: திரு க. ச, அருள்நந்தி, கலாநிதி க, கணபதிப்பிள்ளை, திரு. வ, சபாரத்தினம், திரு. யோன் செல்லப்பா, வணக்கத்துக்குரிய எக்ச். ஏ. தனிநாயகஅடிகள், திருமதி த. நடராசா, திரு. செ. நடராசா, செனற்றர் சு. நடேசன், டாக்டர் த. நல்லைநாதன், திரு. ப. நவரத்தினராசா.

தலைவர் திரு. கோ. ஆழ்வாப்பிள்ளை அவர்கள், துணைத் தலைவர்கள்; பண்டிதர் கா, பொ. இரத்தினம், திருவாளர்கள்: வ. அருளம்பலம், வே கணபதிப்பிள்ளை, தா. கார்த்திகேசர், சி. த. சிவநாயகம், வெ. சுப்பையா, இ. பொ. செல்லையா, மு. தம்பிமுத்து, க. மதியாபரணம், ச, வயிரவப்பிள்ளை, பொதுச் செயலாளர்: திரு. க, வயிரமுத்து.

துணைப் பொதுச் செயலாளர்: திரு. சி. இராமலிங்கம் பொருளாளர், க, தங்கராசா, துணைப் பொருளாளர் திரு. க. இராசரெத்தினம, உறுப்புரிமைச் செயலாளர்: திரு. சே.க.சண்முகம்பிள்ளை. நிலைய அமைப்புச் செயலாளர் திரு. வே. இராசமாணிக்கம். நூல்நிலையப் பொறுப்பாளர் திரு. மு கணபதிப்பிள்ளை.

ஆட்சிக்குழு உறுப்பினர், திருவாளர்கள்: ப. கதிரவேலு ஆச்சாரி, து. கந்தசாமி, ஆ, கந்தையா, கே. கனகசபாபதி, மா, க. கனகேந்திரன், பெ. கணபதிப்பிள்ளை. வி, க. குமாரவேல், ச சங்கரசிவம், சோ. சிவசப்பு, சு. செல்லையா, சி. செல்லையா சி. சேனாதிரசா, வ, நடராசா, வை. பொன்னுச்சாமி, வித்துவான் இ. சி. சோதிநாதன், க குமாரசாமி.

——




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கோட்டு விற்பனவு விளம்பரம்

—:—

சாவகச்சேரி டிஸ்றிக் கோட்டில்

(1) சாவகச்சேரி வேலுப்பிள்ளை சேதுபதியும் பெண்
(2) செல்வரத்தினமும்
மனுதார்கள்

இல. 90/ பலவிதமான (Misc:)

எதிராக:

சாவகச்சேரி தற்காலம் நீர்வேலி தெற்கு, நீர்வேலி
வயிரவநாதர் அருளானந்தம்
உத்திரவாதி

சாவகச்சேரி டிஸ்றிக்கோட்டு பலவிதமான 90-ம் இலக்க வழக்கில் எனக்குக்கிடைத்த உத்தரவுப்பிரகாரம் கீழ்க்காணுமாதன விடாப்பில் நன்கு விபரிக்கப்படு மாதனம் 1960-ம் ஆ ஐப்பசி மீ 29-ந் உ சனிக்கிழமை காலை 10பத்து மணியளவில் அக்காணிகளுள் நின்று என்னுற் பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

தீர்வைத் தொகை:- ரூபா 5833/33-ம் 21-5-59 தொடக்கம் 16-6-59-ம் வரையும் ரூபா 4000-க்கு நூற்றுக்கு 8% வீத வட்டியும் பின் கூட்டிவரும் தொகைக்கு இறுக்கும் வரையும் 5% வீத வட்டியும் கோட்டுச் செலவு ரூபா 249.69. இதில் கொடுபட்ட தொகை ரூபா 2500/-ம் கழித்து மிகுதி.

ஆதன விடாப்பு

வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்றிக் தென்மராட்சிப்பகுதி சாவகச்சேரிக் கோவிற்பற்று சாவகச்சேரியிறை தேவர் புலம் கி. பர. 18. இதில் தெற்குப் பக்கமாக கி. பர. 6. இது ஆட்சிப்படி கி. பர. 9 ஒன்பதுக் கெல்லை கிழக்கு ஒழுங்கை. வடக்கு பொன்னுத்துரை பெண் பொன்னம்மாவுககுரிய வாதனம். மேற்கும் தெற்கும் ஆறுமுகம கனகசபை பெண் செல்லமுத்துவினுரிமைக்காரருக்குரிய வாதனம். இதடங்கலும் கல்வீடும் குசினியும் கற்கூசும் வடக்கெல்லைக காணிக்குள்ளிருக்கும் கிணற்றில் அரைவாசிப் பங்கும். பதிவு F 287/36.

மு. நா. மார்க்கண்டு,
கொம்மிஷனர்.
சாவகச்சேரி, 23-8-60.
M. 97 26-8-60.

---

யாழ்ப்பாணம்

# ஐக்கிய இலாபநிதி

**1918-ம் ஆ ஸ்தாபிதமானது**

வங்கிக்காரர் மூலநிதி 8 லட்சம் ரூபா.
இதுவரையிற் கொடுக்கப்பட்ட பங்குப்பணம் ரூபா
**616313,00**
100 ரூபா விகிதமான 8000 பங்குகள்

பங்குப்பணங்கட்டுமுறை.

மாசமொன்றுக்கு 1 ரூபா விகிதமாக 80 மாச காலத்திற்கு மாசந்தோறும் கட்டப்படவேண்டியது. குறித்த காலமுடிவில் பங்கொன்றுக்கு ரூபா 100 திருப்பிக் கொடுக்கப்படும். பங்குகள் எந்த நேரமும் வாங்கலாம்,

தினசரிப் பற்றுவரவு.

எச்சநிதி சராசரி 500 ரூபாவுக்குக் குறையாமல் இருக்குமாறல் ஒருவிகித வட்டியுடன் தினசரிப் பற்றுவரவு செய்யலாம்.

தவணை வரையறுக்கப்பட்ட க்ஷேமப் பணம்

க்ஷேமப்பணம் 12 மாசம், 36 மாசம் என்னும் காலங்கள் வரையறுத்து ஏற்படும்வட்டியும் முறையே 6 விகிதமும் 8 விகிதமுமாகக் கொடுக்கப்படும்.

உண்டியல்கள்

கொழும்பிலுள்ள "நாஷனல்" வங்கியிலும் 'இம்பீரியல்' வங்கியிலும் இந்தியாவிலுள்ள பிரதான பட்டினங்களிலும் மாற்றத்தக்கவிதமாகக் கொடுக்கப்படும். தொடுவாய் இராச்சியப் பகுதியிலுள்ளவர்களுக்குக் கொடுக்கவும் வாங்கவுமான விசேஷ ஒழுங்குகள் செய்யப்பட்டிருக்கின்றன.

கடன்

நகைகள் ஈடு வைத்துக்கொண்டு கடன் கொடுக்கப்படும். முதலையும் பாகம் பாகமாகக் கொடுக்கலாம்.

இன்னும் வேண்டிய விபரங்களை
என்மூலமாக அறிந்துகொள்ளலாம்

**S. கனகசபை**
சிறுப்பர்

Std 14

---

# விற்பனவு விளம்பரம்

பருத்தித்துறை டிஸ்திறிக் கோட்டு 6274ம் இலக்கவழக்கில் 1960ம் ஆ ஆடி மீ 2ம் உ யைக் கொண்ட கோட்டுக்கட்டளைப் படி கீழே விபரிக்கப்பட்டிருக்கும் ஆதனங்கள் 1960 ம் ஆ புரட்டாதி மீ 29 ம் உ வியாழக்கிழமை முற்பகல் 8-30 மணி தொடக்கம் அந்தந்தக் காணிக்குள் நின்று பின்னுற் காணும் ஆதன டாப்பின் ஒழுங்கின்படி என்னுல் பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

விபரம்

கரணவாய் தெற்கு நிற்சிங்கர் மயில்வாகனம் கைம்பெண்
சின்னாச்சி —வழக்காளி.

எதிராக

கரணவாய் தெற்கு
1. கதிரித்தம்பி சதாசிவம்
2. பெண் மீனாட்சிப்பிள்ளை,
—எதிராளிகள்.

அறவிட வேண்டிய தொகையின் விபரம்

சித்தாரித்த தொகை:- ரூபா 1580. 15-1-59 தொடககம் 24-12-59 வரைக்கும் ரூபா 1300 க்கு 10 வீத வட்டி ரூபா 119-16 25-12-59 தொடக்கம் 25-6-60 வரைக்கும் ரூபா 1699-16 க்கு வட்டி ரூபா 42-47. கோட்டுச் செலவு ரூபா 265-76. மொத்தம் ரூபா 2007-39.

ஆதன டாப்பு

1 கரணவாய் இளகாமக்குறிச்சியிறை வலவன் தோட்டம் பாதி. நில பர 30. குளி 3. இது ஆட்சிப்படியும் அளவின்படியும் நில பர 30. குளி 16½. இதில் பிரிவிடல் ஆட்சிப்படி நடுப்பெற நில. பர 10. குளி ¾ இதில் இழக்கரை வாசி நில பர 5. குளி 3/8. எல்லை கிழக்கு ஒழுங்கை. வடக்கு கதிரித்தம்பி கைம்பெண் பாறுபதிக்குடைய ஆதனமும் வேறு ஆதனமும், மேற்கு வேலுப்பிள்ளை பெருமையினுருக்கும் சகோதரனுக்குமுடைய ஆதனம். தெற்கு மயில்வாகனம் பெண் இளையாச்சிக்குடைய ஆதனம். இவ்வெல்லைக் குட்பட்ட நிலம் பனைகள் அடங்கலும். முழுக் காணிக்கு தென் மேற்குப் புறமாக பள்ளியவத்தை என்னும் ஆதனத்துக்குள் இருக்கும் கிணற்றுக்கு இக் காணிக்கூடாகப் போகும் வழி உரித்தும் சொல்லப்பட்ட கிணற்றில் இதற்குரிய பங்கும் வழி வாய்க்காலுரித்தும்

2. ஷை இறை பள்ளியவத்தை நி, பர 5 5/8 ஷை நில பர. 5 8/5 காட்டிய நில பர 11¼. எல்லை கிழக்கு ஒழுங்கை. வடக்கு முருகேசர் ஆறுமுகத்துக்கும் மறுபேருக்குமுடைய ஆதனம். மேற்கு வேலுப்பிள்ளை பெருமையினுருக்கும் மறுபேருக்குமுடைய ஆதனம். தெற்கு தாமோதரம்பிள்ளை கிருஷ்ணபிள்ளைக்கும் மறுபேருக்குமுடைய ஆதனம். இவ் வெல்லைக்குட்பட்ட நிலத்தில் சொரியலாய் ⅛ பங்கும் வடக்கெல்லைக் காணியில் இருக்கும் கிணற்றில் இதற்குரிய பங்கும் வழிவாய்க்காலுரித்தும்.

S. C. Kanagasabai
கொம்மிசனர்

புலோலிகிழக்கு,
19-8-1960.
(M. 96 26-8-60)

---

## பிஸ்கால் விற்பனை

இலக்கம். 6263.

பிஸ்கால் ஆபிசில்,
யாழ்ப்பாணம், 23-8-1960.

பருத்தித்துறை டிஸ்திறிக்ட் கோட்டில்,

பருத்தித்துறை கற்கோவலம்:
(1) சுப்பையா வடிவேலு சுண்டிக்குளி, குறசற் ஒழுங்கை,
(2) முருகுப்பிள்ளை அரியரத்தினம்.
(3) பெண் அபிராமிப்பிள்ளை —வழக்காளிகள்.

விரோதமாக

ஆளியவலை:
(2) வயிரமுத்து பிள்ளையினுர், நாகர்கோயில்
(3) வயிரமுத்து சதாசிவம்.
மருதங்கேணி:
வயிரமுத்து சின்னத்தம்பியும் வேறு 6 பேர்களும்.
—எதிராளிகள்.

இதன்கீழ் காணப்படும் ஆதனங்களின் மேற்சொல்லிய வழக்கில் 2-ம், 3-ம், 4-ம், 6-ம், 8-ம், 10-ம். 12-ம், 14-ம், 15-ம் எதிராளிகளுக்கு உடைய உரித்தையும், பிரயோசனத்தையும் 1960-ம் ஆண்டு ஐப்பசி மாதம் 12-ந் திகதி புதன்கிழமை பிற்பகல் 3 மணிக்கு பிரசித்த வெந்தீசில் விற்கப்படுமென்று இத்தால் அறிவிக்கப்படுகிறது

ஆதன அட்டவணை

வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திறிக்ட், வடமராட்சிப்பகுதி செம்பியன்பற்று கோயிற்பற்று ஆளியவலை இறை "நாவலடிவளவு" நில. பர. 1 ஏக்கர், 1 றூட், 23 பேச், பதிவு இலக்கம் பி, 51/193

இதில் 5-ம் துண்டுக்கு 03, 3/4 பேச். இது 15-2-1960 ல் உலாந்தா மேஸ்தர் ஏ. கோவிந்தபிள்ளை அவர்களால் 115-ம் இலக்கங்கொண்ட அளவுப்படத்தின்படி, எல்லை கிழக்கு 3-ம் வழக்காளிக்குரிய 3-ம் துண்டு, வடக்கு 3-ம் வழக்காளிக்குரிய 3-ம் துண்டு, மேற்கு கிராமச்சங்க ஒழுங்கை, தெற்கு முடிக்குரிய பொன்னுவின் குத்தகைக்காணி,

பெறுமதி ரூபா. 16/87½.

இதில் 5-ம் துண்டுக்கு நில. பர. 1 றூட், 12 பேச். இது 15-2-1960 ல் உலாந்தா மேஸ்தர் ஏ. கோவிந்தபிள்ளை அவர்களால் விந்தாரிக்கப்பட்ட 115-ம் இலக்கங்கொண்ட அளவுப்படத்தின்படி, எல்லை கிழக்கு கிராமச்சங்க ஒழுங்கை, வடக்கு ஒழுங்கை, மேற்கு முடிக்கும், முடிக்குரிய பி. சின்னததம்பிக்கும், வி. பிள்ளையினுருக்கும் குத்தகையான காணி, தெற்கு முடிக்குரிய காணி,

பெறுமதி ரூபா, 204/-

(மேற்கூறிய காணிகள் முதலில் கூட்டுப்பங்காளருக்கு விற்பனவுக்கு விட்டு அவர்கள் வாங்கத்தவறின் பிரசித்த வெந்தீஸில் விற்கப்படும்.)

P. Pakiyanathan
பொ. பாக்கியநாதன்
பிரதிப் பிஸ்கால், யாழ்ப்பாணம்.

G. 8 26—8—60,

---

## பனங்காமம் சிவாலயம்

———

மாங்குளத்திலிருந்து 15 மைலுக்கப்பாலுள்ள பனங்காமம் என்னும் ஊரில் பண்டைக்காலத்தில் சிவனடியார்களால் வணங்கப்பெற்றுப் பிரசித்தி வாய்ந்திருந்த சிவாலயமானது அழிவுற்றுக் காடுகளால் மூடப்பெற்றிருந்தது.

சில ஆண்டுகளுக்குமுன் பஞ்சலிங்கங்களுள் மூன்று இலிங்கங்களும் விநாயகப்பெருமான் விக்கிரகமும் காட்டுக்குள் கண்டெடுக்கப்பட்டன. சைவ அடியார்கள் சிலரின் நன் முயற்சியால் ஓர் சிவாலயம் அவ்விடத்தில் நவமாயமைக் கப்பட்டு சார்வரி ஆண்டு ஆனி மாதம் 18ந் திகதி (1-7-60) வெள்ளிக்கிழமையன்று சிவலிங்கப்பிரதிட்டை நன்கு செய்யப்பட்டது.

பனங்காமவாசிகளாய திரு. வெ செல்லையா, திரு. சு வீரேசு ஆகியோரிடம் கோவில் பராமரிப்பும், பூசையும், சபையாரால் ஒப்படைக்கப்பட்டன. ஆடி மாதம் 30ந் திகதி (14-8-60) ஞாயிறுறுக்கிழமையன்று மண்டலாபிஷேகம் பூசை முதலியன மிகச்சிறப்பாய் நடந்தேறியது.

———

## பிஸ்கால் விற்பனை

இலக்கம் 4862,

பிஸ்கால் ஆபீசில்,
யாழ்ப்பாணம், 23-8-1960.

பருத்தித்துறை டிஸ்திறிக் கோட்டில்.
வராத்துப்பளை: சிறுபிள்ளைகள் (1) கந்தையா செல்வரத்தினம், (2) கந்தையா மகள் கனகாம்பிகை, (3) கந்தையா ஜெகநாதனும், வேறு 5 பேர்களும். —வழக்காளிகள்,

விரோதமாக

புலோலி கிழக்கு. மாதனை (2) எம், கதிராமு கைம்பெண் சின்னம்மா, (3) கதிராமு கணபதிப்பிள்ளை, (4) கதிராமு கந்தையாவும் வேறு 10 பேர்களும். எதிராளிகள்,

இதன்கீழ்க் காணப்படும் ஆதனங்களின் மேற்சொல்லிய வழக்கில். 2-ம். 3-ம், 4-ம், 6-ம், 7-ம், 8-ம், 9-ம், 10-ம், 13-ம், 14-ம் 15-ம், 16-ம், 17-ம் எதிராளிகளுக்கு உடைய உரித்தையும் பிரயோசனத்தையும் 1960-ம் ஆண்டு ஐப்பசி மாதம் 10-ந் திகதி திங்கட்கிழமை பிற்பகல் 3 மணிக்கு பிரசித்த வெந்திசில் விற்கப்படுமென்று இத்தால் அறிவிக்கப்படுகிறது.

ஆதன அட்டவணை:

வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திறிக்ட், வடமராட்சிப் பகுதி பருததித்துறை கோயிற்பற்று, வராத்துப்பளை இறை "மதிரன்கட்டுவன்" நில. பர. 16. குளி 8 25/32-ம் அதைச் சேர்ந்தவைகளும். இது 1959-ம் ஆண்டு கார்த்திகை மாதம் 22-ந் திகதியில் கோட்டால் நியமிக்கப்பட்ட உலாந்தா மேஸ்தரும் கொம்மிசனருமாகிய ரி. சுப்பிரமணியம் அவர்களால் 2097-ம் இலக்கங்கொண்ட அளவுப் படத்தின்படி 1-ம், 2-ம், 3-ம், 4-ம், 5-ம் துண்டுகளாகக் காண்பிக்கப்பட்டிருக்கிறது.

இதில் 1-ம் துண்டுக்கு நில. பர. 1 குளி 16, 45/64-ம் இதற்குள் 9 பெண்பனைகளும் 10 ஆண்பனைகளும். எல்லை கிழக்கு சொல்லப்பட்ட படததின் 2-ம், 5-ம் துண்டுகள். வடக்கு கந்தையா கைம்பெண் அன்னப்மாவிற்கும் மறுபேருக்குமுரிய ஆதனங்கள். மேற்கு மூத்தர் சின்னையாவுக்கும் மறுபேருக்கு முரிய ஆதனம், தெற்கு முருகர் சின்னத்தம்பிக்கும் மறுபேருக்கு முரிய ஆதனம்.

பெறுமதி ரூபா 699.20

இதில் 2-ம் துண்டுககு நில. பர. 1 குளி 16,45/64-ம் இதற்குள் 13 பெண்பனைகளும் 13 ஆண்பனைகளும், எல்லை கிழக்கு சொல்லப்பட்ட படத்தின் 3-ம் துண்டு வடக்கு சொல்லப்பட்ட படத்தின் 5-ம் துண்டு. மேற்கு சொல்லப்பட்ட படத்தின் 1-ம் துண்டு; தெற்கு முருகர் சின்னத்தம்பிக்கும் மறுபேருககு முரிய ஆதனம்,

பெறுமதி ரூபா 890.54.

(மேற்கூறிய ஆதனங்கள் முதலில் கூட்டுப் பங்காளருக்கு விற்பனவுக்கு விட்டு அவர்கள் வாங்கத் தவறின் பிரசித்த வெந்திசில் விற்கப்படும்).

P. Pakiyanathan
பொ. பாக்கியநாதன்
பிரதிப்பிஸ்கால், யாழ்ப்பாணம்.

G. 9 26-8-60.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிவஸ்ரீ ச. குமாரசுவாமிக் குருக்களுக்குப் பாராட்டு விழா

## செயற்கரியசெய்த சைவசீலர்

(சைவமும் தமிழும் வளர்த்த - சிவதொண்டு செய்து வருகின்ற அச்சுவேலி சிவஸ்ரீ ச. குமாரசுவாமிக்குருக்கள் அவர்களுக்கு அன்னாரின் அளப்பரும் தெய்வப் பணியைப் பாராட்டும் விழா நடத்துவதற்குப் பல பெரியார்கள் ஒழுங்கு செய்து வருகின்றனர். பாராட்டுச் சபையார் குருக்கள் அவர்களைப்பற்றி எழுதிய குறிப்புரையை இங்கு தருகின்ரும்.)

ஸ்ரீ-ல-ஸ்ரீ ஆறுமுகநாவலர் அவர்களும் ஸ்ரீ-ல-ஸ்ரீ சிவசங்கர பண்டிதர் அவர்களும் சைவத்தையும் தமிழையும சம்ஸ்கிருதத்தையும் பேணி மரபு பிறழாமல் அவற்றை வளர்த்து வந்தவர்கள், அவர்களின் அடிச்சுவட்டைப் பின்பற்றி அவற்றைப் பேணி வருபவர்கள். யாழ்ப்பாணத்திலே இன்றைய தினம் ஒரே ஒருவர்தாம் உளர் என்ருல், அந்த ஒருவர் அச்சுவேலி, சிவஸ்ரீ ச. குமாரசுவாமிக்குருக்கள் அவர்களே யாவர்.

குருக்கள் அவர்களின் சைவசித்தாந்த அறிவும் சிவாகமப் பயிற்சியும் இச் சேய் நாட்டிலன்றித் தாய்நாட்டிலும் சைவ ஆதீனங்களிலும் பெரிதும் மதிப்பைப் பெற்றிருக்கின்றன. ஞானத்துக்கு நிமித்தம் கிரியை என்ற உண்மையையும் கன்மகாண்டத்தின் அருமை பெருமைகளையும் எடுத்து விளக்கஞ் செய்ய வல்லவர்கள் எங்கள் குருக்கள் அவர்களே.

சிறு குழந்தைகள் தொடக்கம் சிவாசாரியர்கள் பரியந்தம் சிந்தித்துப் படிக்கத்தக்க முறையில் நூலுரைகளை இயற்றியிருக்கின்ருர்கள். இயறிக்கொண்டேயிருக்கின்ருர்கள்.

(அ) சிவாகமசேகரம் பிரதிஷ்டாவிதி, சிவலிங்கப் பிரதிஷ்டாவிதி, பிராசாத சட்சுலோகி சங்கரபண்டிதர் தமிழுரை, அநுட்டான அகவலுரை, சிவபூசைவிதி, சிவபூசை விளக்கம், மகோற்சவ விளக்கம், முப்பொருள் விளக்கம், சிராத்த தீபிகை, பிராசாததீபம் புத்துரை, விநாயக பரத்துவம், புவனேசுவரி மந்த்துவம், வேதாகம நிரூபணம் 1-ம் 2ம் பாகம், சைவப் பிரகாசிகை 1-ம், 2-ம், 3-ம் 4-ம் 5-ம் புத்தகங்கள், சிவசங்கர பண்டிதர் சரித்திரம், சைவ சாத்திர பரிபாலனம் மாத சஞ்சிகைமுதலியன குருக்கள் அவர்கள் அச்சிட்டு வெளியிட்டவைகள்.

ஆ சிவாகமசேகரத்தின் தொடர்பாக விநாயகர் பிரதிஷ்டாவிதி சுப்பிரமணியர் பிரதிஷ்டாவிதி என்பன அச்சிடுதற்கு ஆயத்தமாக எழுதி வைத்திருப்பவைகள்.

இ. அகோர சிவாசாரியர் பத்ததி பத்ததிகளுள் விரிவானது. அதற்குத் தமிழில் உரை எழுதி வருகின்ருர்கள். அதில் 'அக்கினி காரியம்' என்ற பகுதியின் உரை பூர்த்தியாய் விட்டது; தனியே வெளிவரத்தக்கது.

குருக்கள் அவர்களுக்கு வயசு 74. இந்த முதிர்ந்த வயசிலும் ஓய்வின்றி நூலுரைகள் எழுதிக்கொண்டேயிருக்கின்ருர்கள்.

அவர்கள் நடாத்திவந்த சைவ சாத்திர பரிபாலனம் என்ற மாதசஞ்சிகை அத்தியாவசியகமானது, அருமையானது. காகிதப்பஞ்சத்தாலக்காலத்தில் நிறுத்தப்பட்டது. அது மீண்டு நடத்தப்பட வேண்டியது

குருக்கள் அவர்கள் அச்சுவேலி விநாயகராலய நித்திய நைமித்தியங்களையும், ஆலயத்தின் மேலை வீதியில் ஒரு சைவப்பிரகாச வித்தியாசாலையையும் நன்கு நடத்தி வருவது பிரசித்தம்.

மருதன்கேணியிலும் சோரன்பற்றிலும் நடக்கும் சைவ பாடசாலைகளும் குருக்களவர்களால் ஆரம்பிக்கப்பட்டவைகள்.

வேதாகம சங்கத்துக்குத் தலைவராயிருந்து குருக்கள் அவர்கள் சைவத்துக்குச் செய்த தொண்டுகள் பல. அவ்வப்போது கிளைத்தெழும் வேதாகம விரோதங்களை நிராகரணஞ்செய்வதில் அவர்கள் தவறியதில்லை.

சைவபரிபாலனசபையிலும் கொழும்பு விவேகானந்த சபையிலும் பெரிதும் தொண்டாற்றியிருக்கின்ருர்கள். சைவபரிபாலன சபை ஆதரவில் நடந்த குருவகுப்பில் குருக்கள் அவர்கள் இலவசமாகச் சிவாகமம் கற்பித்து தந்தவர்கள். அவ்வகுப்புத் தொடர்ந்து நடக்க வேண்டுவதொன்றென்பதைச் சைவ உலகம் சிந்திக்கவேண்டும்.

சிவஞானபோதம் 9-ம் சூத்திரத்துக்குக் குருக்கள் அவர்கள் செய்த விளக்கக்கட்டுரையை, தருமபுரமகா சந்நிதானம் பாராட்டிக் குருக்கள் அவர்களுக்குப் பரிசிலும் வழங்கியது. கட்டுரை ஆதீன விசேட மலரில் வெளிவந்திருக்கிறது

மடாதிபதிகளும் கலாநிதி உ.வே.சாமிநாதையர்போன்ற தமிழறிஞர்களும் குருக்கள் அவர்களைப் பாராட்டி மதிப்புரை செய்திருக்கின்ருர்கள்.

குருக்கள் அவர்கள் ஈகையாளர்கள். ஏற்றல் உரிய தொன்ருயினும் அதனைத் தம் வாழ்க்கையில் அவர்கள் பொருள் செய்ததில்லை

அவர்கள் செய்த கும்பாபிஷேகங்கள் எத்தனை! தீக்ஷையாதி கிரியைகளெத்தனை! அவைகளை நிகழ்த்தும்போது கிரியைகளை விதிப்படி பூர்த்தி செய்வதிலேயே குருக்கள் அவர்கள் கண்ணுங்கருத்துமாயிருப்பவர்கள்.

மேற்குறிப்பிட்டவைகளெல்லாம் முதியோரும் சிவாசாரியப் பொலிவுபடைத்தோருமான எங்கள் குருக்கள் அவர்கள் கைமாறு கருதாது செய்த, செய்து வருகின்ற சைவ கைங்கரியங்களேயாம்.

"செயற்கரிய செய்வார் பெரியர்"

## மக்களும் பாம்புகளும்

(முற்ருெடர் - 4)

விரியன்

இதன் பெயர் காரண இடுகுறிப்பெயராக அமைந்திருப்பதைக் காணலாம். இவற்றில் ஆறு வகையுண்டு. (i) பெருவிரியன், (ii) இரத்த விரியன், (iii) செவ்விரியன், (iv) நீர்விரியன், (v) புள்ளி விரியன், (vi) புல்விரியன். இவற்றின் தாய்ப்பாம்பு சூல் கொண்டு பருவகாலத்தில் முதுகால் வெடித்துத் தான் இறந்துவிடுகின்றது. அதற்குள்ளிருந்த குட்டிகள் ஆறும், இப்பெயர்களுடையனவாய், பிறந்த உடனேயே சீவிக்கும் சக்தியுடையனவாய் இருக்கின்றன. இவற்றுள் இரத்த விரியன் கூடிய விஷமுடையதாயிருக்கும். இதனல் தாக்கப்பட்டவர்களின் கடிவாயிலிருந்து இரத்தம்

விஷ வைத்தியர்
திரு. க. சிற்றம்பலம் அவர்கள்

ஓடிக்கொண்டேயிருக்கும். வாயால் இரத்தம் வரும், மலம், சலம், வேர்வை, மூக்குச்சளி முதலிய எல்லாக் கழிவுப்பொருட்களும் இரத்தமாகவரும். இதைக்கண்டு நோயாளி பயப்படவேண்டியதில்லை. விஷம் கலந்த இரத்தத்தை இரத்தாசையம் ஏற்காது விடவே. அவை கழிவுப் பொருள்களாய் வெளியேபோக வேண்டியவை யாகின்றன. ஆகையால் இரத்தப்போக்கைத் தடைப்படுத்தல் கூடாது. உடலுக்குள் கட்டிப் புண்ணுகவும்கூடும்; நெஞ்சில் இரத்தம் உறைந்து வலியுண்டாகி, வலி ஏற்படவும்கூடும். இதனல் தாக்கப்பட்டவர்கள் விரைவில் வைத்தியனிடம் செல்லுதல் வேண்டும்.

விரியனில்
நான் கண்ட ஆராய்ச்சி:

பல நாட்களாக அடுக்கியிருந்த பழங்கிடுகை எடுத்துத் தப்பரவித்தபோது, ஒரு சிறு பாம்பு வயிறு பெரிதாகவும், மயங்கிய, தயங்கிய நிலையிலும் மெல்ல மெல்ல நகரத்தொடங்கியது. இதை உற்று நோக்கிக் கொண்டிருந்த நான் வேலை செய்து கொண்டு இருந்தவர்களில் ஒருவனைக் கூப்பிட்டுக்காட்ட, அவன் கிழுவந்தடியால் மெதுவாகத்தள்ளவே பாமபு முதுகுப்புறத்தால் வெடித்ததும், சிறு குட்டிகள் ஆறு அதனுளிருந்து வெளிவந்தன. அவை மெல்ல, மெல்ல நகரத்தொடங்கின. ஆனல் குட்டிகள் ஆறும் ஒரே தன்மையானதாகக் காணப்படவில்லை. சிறிதும் பெரிதுமாகக் காணப்பட்டன. இந்நிகழ்ச்சியைக் கண்ட என்னுள்ளம் இறைவனது படைப்புத்தன்மையையும், "கல்லினுள் தேரைக்கும் கருப்பையுயிர்க்கும்" அவன் அருள் பாலிக்கும் தன்மையையும் உணரத் தொடங்கியது. விரியன் என்ற பெயரைச் சித்தர்கள் காரண இடுகுறிப்பெயராகவேயிட்டார்கள் என்ற நம்பிக்கையும் ஏற்பட்டது.

வழலைப்பாம்பு

இதிற் பல இனங்களுண்டு. இதனலே தாக்கப்பட்டவர்கள் மயக்கமுடையவர்களாகவும், நெஞ்சில் கபம் கொண்டவர்களாகவும், கண் சிவந்து கருவிழி இறங்கிய நிலையானதாகவும், கண் பார்வை மயங்கியதாகவும், தண்ணீர்த்தாகத்தால் தவிப்பவர்களாகவும், வேர்வை அதிகமாயுடையவர்களாகவும் காணவரும். இவற்

தொடர்ச்சி 6—ம் பக்கம்

## சமயமென்று சாற்று

1-ம் பக்கத் தொடர்ச்சி

அடியேன் மனம் - வாக்கு - காயம் என்பவற்ருல் வழிபடுவோன், வாக்கு மனதீத கோசரராஞலும் சர்வஜ்ஞராகிய தேவரீர் அடியேனுக்கு அருள்தரவேண்டும் எனபதே முறை. சித்தாந்தம் ஒரு சமயமன்று. வேதாந்தம், சித்தாந்தம் என்பன சைவ சமயத்தின் கணுள் இருவழிகள். சிந்தாந்தம் முடிந்த முடிபு, அத்துவிதப்பேரன்பு தரும் உயர்நெறி, முறை தவறிய செயலுக்குப் பயன் யாதும் உண்டாகாது. சைவ சமயம் திகழ்ந்தது நூல்களாலேமட்டும் அன்று, அரசர்கள் பேரடியார்கள் சமயத்தைக் கண்களாகவன்றே கருதினர், திருநாவுக்கரசு நாயனரையும், திருஞானசம்பந்த மூர்த்தி நாயனரையும் "புண்ணியக்கண் இரண்டெனவும்" என்ருர் சேக்கிழாரடிகள். இராமலிங்கசுவாமிகள், சோமசுந்தரநாயகர் முதலியோர் பின்பு தோன்றிச் சைவ சமயத்தை முன்னேர் மொழி வழாது போற்றினர், தூர இடம் ஏன் செல்வான் நமது யாழ்ப்பாண மாநகர மக்கள் மக்களாய்ச் சிறப்படைய ஒரு நாவலரன்றே பாடுபட்டார், பேச்சளவில் நாவலர் வழி என்ருற் போதுமா? அப்பெருமான் கண்ட நூல்களையும் அவரையும் மதிப்பது எப்படி? புனைபெயர் புதுப்பெயரளவில் நின்றுவிடக் கூடாது. சிவதொண்டர் என்றளவில் தவருது சிலகாலம் மறவாது நடப்பதையே நாம் கைக்கொள்ள வேண்டும். 'சைவசமயி என்பதை மாற்றலாகாது. தலைவர் இல்லாதது சமயமன்று: பிறந் திறப்போரும்' தலைவர் அல்லர். சிவபெருமான் பிறந்திறப்போரும் தலைவர் அல்லர். சிவபெருமான் பிறந்திறவாதவர், ஆன்மாக்களுக்குப் பிறந்து இறவாதபேரின்பம் அருளுபவர். சிவசிந்தனையாற்ருன் அருள் பெறலாம். ஆகவே, தமிழ் அன்பர்கள் ஒரு சமயத்தைப்பற்றி நின்று (சைவசமயவழிநின்று) சிவ வழிபாடுசெய்து உயிர்க்கு உறுதி தேடுவாராக.

## சோதிர்லிங்கத் திருத்தலம்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

போனர், திரும்பிவந்த இராவணன் இலிங்கத்தை எடுக்க முயன்றபொழுது முன்கூறு பச்சிமகாசி என்று கூறப்படும் கோகர்ணம் சேத்திரத்திலும் பின்கூறு இந்த சேத்திரத்திலும் பாதாளம்வரையில் ஊடுருவிச் சென்றுவிட்டது. என்று புராணவரலாற்றிற் கூறப்படுகின்றது.

மற்ருெரு வரலாறு:

கயிலைமலையிற் பலகாலம் அர்ச்சித்தும் பயன்பெருத இராவணன், இமாலயத்தினது தென்பகுதியிற் பெரியகுண்டம் உண்டாக்கித் தன்னுடைய தலைகளை ஒவ்வொன்ருகக் கொய்து ஹோமம் செய்தான், பத்தாவது தலையை வெட்டி எடுக்கும் சமயம் கயிலாயபதி பிரசன்னமாகிச் சத்துருவுக்கு இளைக்காத வன்மையுடன் அறுத்த சிரசுகள் மீண்டும் வளர்ந்து வரும்படியும் அருளினர். இத்தகைய சிறப்பினையுடைய தலமே இவ்வைத்தியநாதம் என்று மற்ருெரு வரலாறும் கூறுகின்றது.

இலிங்கத்தை எடுக்க முயன்றபொழுது, இலிங்கம் எடுக்கமுடியாது போகவே கோபம்கொண்ட இராவணன், சிறுவனுக வந்தவன் தலையில் குட்டினும், அந்தவடு கோகர்ணத்திலுள்ள விநாயகர் சிரசில் இன்றும் காணப்படுகின்றது. (தொடரும்)


## தொழில் நுட்பக் கல்லூரி

(SCHOOL OF TECHNOLOGY)

சுண்டிக்குளி யாழ்ப்பாணம்

ஜி. சி. ஈ. உயர்தர பரீட்சை (G. C. E. Advanced Level) பொருளாதாரம் (Economics):—

ஆகஸ்ற்றில் வகுப்பு ஆரம்பமாகின்றது. பாடம் ஒன்றுக்கு மாதச்சம்பளம் ரூபா. 10/-. தகுதிவாய்ந்த கல்வியறிஞர் ஒழுங்கான பயிற்சியளிப்பர். சேரவிரும்பும் மாணவர் உடனே விண்ணப்பஞ் செய்தல் வேண்டும்.

தலைமை ஆசிரியர்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மக்களும் பாம்புகளும்

[5-ம் பக்கத் தொடர்ச்சி]

ஊறக் கருவழலை, செவ்வழலை எனப் பிரிக்கலாம். இவை வாழைத்தோட்டங்கள், புற்றரைகள் முதலிய இடங்களில் வசிக்கும். மக்களைத் தாக்கும்போது ஒளித்திருந்தே தாக்கும், இவை படம் எடுக்கா.

புடையன்:

இவற்றிலும் பல இனங்கள் பல தன்மைகளுள்ளனவாக உண்டு. இவற்றின் முதுகில் முத்திரை போன்ற புள்ளிகள் உண்டு, உருவத்திலும் பல வித்தியாசங்களுண்டு, வசிக்கும் இடத்துக்கேற்ப நிறம் வித்தியசமானது, இது கொடிய விஷமுடையது. இது தாக்கினல் கண் பார்வை குன்றிவிடும், காது கேட் கேட்காது, தாக்கப்பட்ட இடத்தில் நோவு அதிகமாக இருக்கும் இவைகள் பெரு மரங்கள், புற்றுக்கள், பாழானவீடு, பாழான கோவில், புல் செடிகள் முதலியனவற்றுள் வசிக்கும். இவை இரவிற் கிடக்கும்போது எருமைச்சாணி, காய்ந்த தென்னம்கோழை போன்ற உருவமாகத் தலையை மேலே வைத்துக் கொண்டு அசையாது படுத்திருக்கும். பாம்பு என்ற எண்ணம் இவை கிடக்கும் இடத்தில் வாரது, தவளை, எலி முதலியன கிட்டச் சென்றதும் எட்டிப் பிடித்துக்கொள்ளும் மக்களும் அதற்குக் கிட்டச் சென்றல் எட்டித்தாக்கும். கடிவாயிலிருந்து இரத்தம் ஓடக்கூடியதாகவே தாக்கும். அவற்றின் உருவத்துக்கு ஏற்றமாதிரியே காயம் ஏற்படும். கண்ணுடிப் புடையன் மற்றைப்புடையன்களிலும் உருவத்திலும், விஷத்திலும் வித்தியாசமான தன்மையானது பளபளப்பானதாக இருக்கும். புடையன்பாம்பு உருவத்தில் பெரியதாகவும் உண்டு.

கோம்பேறிமூக்கன்:

இது சாரைப் பாம்பு போன்ற உருவமுடையது. மக்களைத் தாக்கியஉடனே அருகிலுள்ள மரத்தில் ஏறிவிடும். மரத்தில் ஏறியவுடன் தாக்கப்பட்டவன் உடனே மயங்கிவிடுவான். மயங்கியவனை மஞ்சட் சீலையால் மூடிவிட்டு, வைக்கோலால் பாவைசெய்து மேளம் அடித்து, அழுது, பாடைகட்டி, பாடையிற் பாவையை வைத்து 200 யாருக்கிடையில் வைத்துத் தண்ணீர் தெளித்துப் பாவையைக் கொழுத்தியவுடன், அப்புகை கண்ட அரவம், தான் கடித்தவன் இறந்துவிட்டான் என்ற எண்ணத்துடன் நிலம் நோக்கி இறங்கும். அப்பொழுது மயங்கிக் கிடந்தவன் நித்திரைவிட்டு எழுந்தவன்போல எழுந்திருப்பான். இது எனது அநுபவமுறையினுலும் கண்ட உண்மையாகும். இதுபாட்டிக் கதையென எண்ணுதல்கூடாது. பெயருக்குப் பொருத்தமாகவே அதன் செயல் இருப்பதை நாம் காணலாம்.

சாரைப்பாம்பு:

இது எங்கும் அதிகமாக வசிக்கும். இது மனிதரைத் தாக்கவேண்டுமெனத் தாக்காது. இரை என்று சில நேரங்களிற் தாக்கவும் கூடும் தாக்கினுலும் அற்ப விஷமுண்டு. தலை நடுக்கம், உண்டாகும். சிகிச்சைசெய்தல் வேண்டும்.

(தொடரும்)

## திருஞானசம்பந்தர் கழகம் 9ம் ஆண்டு தொடக்கவிழா

சிதம்பரம் ஆவணி 22.

திருஞானசம்பந்தரின் திருவவதாரத் தலமாகவுள்ள சீர்காழியில் 21-8-60-ல் திருஞானசம்பந்தர் கழகத்தின் 9வது ஆண்டு தொடக்கவிழாவும் சிவபூசை செய்பவர்களின் மாநாடும் சிறந்தமுறையில் தருமபுரம் ஆதீனத்திற்குச் சொந்தமாகவுள் சிவாலயத்தில் திருஞானசம்பந்தர் ஆலயத்தில் நடைபெற்றன

காலையில் "சிவபூசை வள்ளல்" தேவகோட்டை ஸ்ரீ சேவு-மெய்யப்பச்செட்டியார் தலைமையில் சிவபூசைசெய்பவர்களின் மாநாடு நடைபெற்றது. 55 சிவபூசா துரந்தரர்கள் சிவபூசை செய்தனர். 9 மணிக்கு வீதி வலம் வந்தனர், பின்னர் அறுபத்துமூவருக்கு அபிடேகம் ஆராதனைகள் நடைபெற்றன.

தேவஸ்தானம் கட்டளை விசாரணை ஸ்ரீ இராமலிங்கத் தம்பிரான்சுவாமிகள் தலைமையில் 9 வது ஆண்டு தொடக்க விழா நடைபெற்றது. திரு. இரா. சண்முகசுந்தரம்செட்டியார் மனம், வாக்கு, காயம் மூன்றினுலும் இறைவனை வழிபாடு செய்ய வேண்டியதற்கு ஆதாரமாகத்தேவாரப்பாடல்கள் மூலம் விளக்கிக்கூறினர்

## ஆடிக் கார்த்திகை விழா

—சிதம்பரம் ஆவணி 20

செந்தமிழ் நாட்டில் மக்களுக்குத் தீராத பிணிகளை எல்லாம் பிரார்த்தனைகள் மூலம் தீர்த்தருளும் தலமாகவும், தருமபுரம் ஆதினத்திற்குச் சொந்தமான 27தேவஸ்தானங்களில பிரசித்தமான ஆலயமாகவுமுள்ள வைத்தீஸ்வரன் கோயில் என்றுகூறும் புள்ளிருக்குவேளூர் தேவஸ்தானத்தில் 15-ம் தேதி ஆடிக் கார்த்திகை விழாவன்று பல ஆயிரக்கணக்கான மக்கள் வந்து கூடித் தரிசனம் செய்தனர்.

மேற்படி தேவஸ்தானத்தில் ஸ்ரீலஸ்ரீ கயிலைமகா சந்நிதானம அவர்கள் இலட்சக்கணக்கான ரூபா செலவில் மூலவர்களுககுத் தங்கக் கவசங்கள் செய்து அணிவிழாச் செய்திருக்கின்றூர்கள். மேலும உற்சவர் ஸ்ரீசெல்வமுத்துக் குமாரசுவாமிக்கு 1 இலட்சத்து 60 ஆயிரம் ரூபா செலவில் நவரத்தின அங்கியும் தயாராகியும் வருகின்றது.

திரு. மா. பா. தினமணிநிருபர்)

நீங்கள் இளமைப் பருவத்தையடைய
சி. எம் சாமி
தங்கபஸ்பம்
உபயோகியுங்கள்.

தேகபுஷ்டியைத் தருவதில் இதற்கு நிகர் வேறுஇல்லை. உடல் பலத்தையும் இரத்த விருத்தியையும் பசியையும், உண்டாக்குகிறது. வாழ்க்கையில் இன்பத்தைத் தருகிறது. உஷ்ணம், இடுப்பு வலி, வாய்வு முதலிய வியாதிகளைக் குணமாக்குகிறது.

24 நாள் பஸ்பம் அனுபானத்துடன் விலை ரூ 35-00.

தாளக பஸ்பம் ஈளை. இளைப்பு, தொய்வு, இருமல் கடின சுவாசம், கோழை. கபக்கட்டு. பீனிசம் இவைகள் எவ்வளவு நாட்பட்டதாயிருந்தாலும் குணமாக்குகிறது.

24 நாள் புட்டி 1-க்கு விலை ரூ 12-00
ஏஜெண்டுகள் தேவை. : கேட்லாக் இனும்.

மலையப்பசாமி வைத்தியசாலை, பழனி S I.

## உங்கள் நக்ஷத்திரம்?

[ஸ்ரீ ராதாகிருஷ்ணன் கணிப்பது] எங்கள்சோதிடம்
இவ்வாரப் பலன்கள் 28-8-60—3-9-60

**மேடராசி** அச்சுவினி, பரணி கார்த்திகை முதற்கால்.

ஞாயிறு மாலை திங்கள் செவ்வாய் நாட்களிற் கவனமாக இருத்தல் வேண்டும். ஏனைய நாட்கள் உத்தியோக முறைகளில் நன்மையாயிருக்கும், பண நயத்துக்கும் நம்பிக்கை உண்டு.

**இடபராசி** கார்த்திகை 2, 3 4-ம் கால்கள் ரோகிணி, மிருகசீரிடம், 1, 2-ம் பாதம்,

வார முற்பக்கம் வியாபார அலுவல்களுககு நன்மையாயிருககும் நண்பர்கள் மிகவுறுதியாயிருப்பர். புதன் வியாழம் வெள்ளி காலை அவதானமாக இருத்தல் வேண்டும் ஏனைய நாட்கள் நியாயமாக, நல்லன வாயிநக்கும், ஆனல் மனச்சாந்தியிராது.

**மிதுனராசி** மிருகசீரிடம், 3, 4 திருவாதிரை, புனர்பூசம் 1, 2, 3 4ம் பாதம்.

ஓரளவுக்கு உகந்த வாரம். புது முயற்சிகளிற் பண விருததியும் இலாபமும் எதிர்பார்ககலாம். இளைய சகோதர சகோதரிகள மிகவும் உதவியாயிருப்பர். வார இறுதி இருநாட்களையும் அவதானமாககழிககவும்,

**கடகராசி** புநர்பூசம் 4ம் பாதம் பூசம் ஆயிலியம்.

பணத்துறையில் நல்ல வாரம். காத்திராத இலாபத்தை எதிர்பார்க்கலாம் பழைய முதலீடுகள் நற்பயனைக்கொண்டுவரும். எதிரிகளுக்கு நட்டமும் போட்டியிடுபவர்கள்மீது வெற்றியும் காணப்படும்.

**சிங்கராசி** மகம், பூரம், உத்தரம் 1-ம் பாதம்.

சில சொந்த அலுவல்கள் இன்னுஞ் சிலகாலத்துத் தீர்க்கப்படாதிருக்கும். மனம் ஒரு நிலைப்படமாட்டாது. சிறு சுகவீனமும் உண்டாகலாம், ஆனல் பணத்துறையில் நல்ல வாரம்.

**கன்னிராசி** உத்தரம் 2, 3, 4ம் பாதம் அத்தம் சித்திரை 1, 2ம் பாதம்.

எதிர்பாலார் அதிகம் உதவியாயிருப்பர். புது முயற்சிகள் தாமதப்பட்டாலும் நன்மையாய் முடியும், எதிரிகளுக்கு நட்டப் காணப்படும்,

**துலாம்,** சித்திரை 3 4ம் பதாப் சுவாதி விசாகம் 1, 2, 3ம் பாதம்.

அலுவல்களைக் கொண்டு நடத்துவது சுலபமாயிருக்கும், இவ்வாரம் எதிர்ப்பு மெல்ல ஒழியும், ஆனல் சிறு சுகவீனங்சள் காணப்படும், கண் தொந்தரவு காணப்படலாம்,

**விருட்சிகராசி** விசாகம் 4-ம் பாதம் அநுஷம், கேட்டை.

பணவகையில் நல்ல வாரம். உததியோக சித்தியும் புகழும் எதிபார்க்கலாம். ஆனல் குடும்பச்சூழலில் எல்லாம் சரியாய் இராது. தப்பான விளக்கமும் சச்சரவும் காணப்படும்.

**தனுராசி** மூலம், பூராடம் உத்தராடம் 1ம் பாதம்.

உணர்ச்சி சம்பந்தமான அலுவல்களிற் பிணககுகள் ஏற்படும், தந்தைவழிச் சுற்றத்தார் கூடுதலான செலவையும் தொல்லையையும் உண்டாக்ககூடும், ஆனல் அநேகமான எதிர்ப்புகள் நடையிலிருந்து வெளியேற முடியும்.

**மகராசி** உத்தராடம் 2, 3, 4ம் பாதம் திருவோணம் அவிட்டம் 1, 2ம் பாதம்,

மனச்சாந்தியிராது. தேக நலமும் மிகநல்லாயிராது, நண்பர்கள் சுற்றத்தவர்களுடன் சச்சரவும்விபரீத விளக்கமும் ஏற்படக்கூடும். சில காலத்துக்குப் புதிய அலுவல்களைத் தொடங்க வேண்டாம்,

**கும்பராசி** அவிட்டம் 3, 4ம் பாதம், சதயம், பூரட்டாதி 1, 2, 3ம் பாதம்,

குடும்பத் தொல்லைகள் தவிர மற்றும்படி நல்ல வாரத்தை எதிர்பார்கலாம். அநுகூலமான மாற்றங்கள், புது முயற்சிகளிற் சித்தி, புகழ் எதிர்பார்க்கலாம், காததிராத இலாபங்களும் காட்டப்படுகின்றன,

**மீனராசி** பூரட்டாதி 4, உத்தரட்டாதி ரேவதி

எல்லா எதிர்ப்பினின்றும் வெளியேற இடமுண்டு. உத்தியோகசித்தியும் காணிகளால் இலாபமும் எதிர்பார்க்கலாம், ஆனற் குடும்பச் சூழலில் எல்லாம் நல்லாய் அமையாது.

ஏந்திர கைத்தொழிற் சமாசம்
வரையறுக்கப்பட்டது

"த சிற்றடல்" சுண்டிக்குளி, யாழ்ப்பாணம்
(தொலைபேசி 617—தந்தி ரெக்நோலொஜி)

பின்வரும் வேலைகள் செய்யப் பொறுப்பேற்கின்றது.

எல்லாவித நீர்க்குழாய்கள் (வாட்டர் பம்ஸ்), தட்டெழுத்து யந்திரங்கள், தையல் யந்திரங்கள், மின்சாரத்துறைப் பொருள்கள் (இலெக்றிக்கல் அப்பிளையன்செஸ்) உதாரணமாக;

(அ) மோட்டார்கள், மின்சத்தி ஆக்கக் கருவிகள் (ஜெனறேற்றேஸ்) உஷ்ண ஆக்கக் கருவிகள் (ஹீற்றேஸ்) பட ஒளிப் பதிவுக்கருவிகள் (சினிமா புறேஜெக்ரேஸ்)முதலியவைகளின் திருத்தம்.

(ஆ) தராதரம்பெற்ற மின்சார வேலை வல்லுனரால் வீட்டுக்கு மின்சாரக்கம்பியமைத்தல்,

(இ) பேர்ப்பலகைகள், அறிகுறிப்பலகைகள் (சயின்போட்ஸ்) மைதீட்டியமைத்தல்.

## திருவாவடுதுறை ஆதீனகர்த்தர் அவர்களின் உபகாரச் சம்பளம்

சிதம்பரம் ஆவணி 22.

திருக்கயிலாய பரம்பரைத் திருவாவடுதுறை ஆதீனம் 21 வது குருமகாசந்நிதானம் ஸ்ரீலஸ்ரீ சுப்பிரமணியதேசிக பரமாசாரியசுவாமிகள், அண்ணாமலைப் பல்கலைக் கழகம் தமிழ் எம். ஏ. வகுப்பில் சைவசித்தாந்தசாஸ்திரம் சிவஞானபோதத்தைஇஷ்டபாடமாக எடுத்துக் கொண்டிருக்கும் ஓர் மாணவருக்கு உபகாரச் சம்பளமாக ரூபா 300 வழங்கியுள்ளார்கள்.

மேற் கண்ட வகுப்பில் மற்றும் ஓர் மாணவர் சிவஞான போதத்தை இஷ்ட பாடமாக எடுத்துக் கொண்டிருப்பவருக்கு தேவ கோட்டையைச் சேர்ந்த "சிவபூசைவள்ளல்" ஸ்ரீ சேவு மெய்யப்ப செட்டியாரவர்கள் ரூபா 300 வழங்குவதாகவும் தெரிவித்திருக்கின்றூரென்றும் அறியக்கிடக்கின்றது

(திரு. மா.பா, தினமணிநிருபர்)

## நாரந்தனை மனோன்மணி அம்பாள் ஆலய விழாக்கள்

நாரந்தனை மனோன்மணி அம்பாள் ஆலயத்தின் இவ்வருட விழாக்கள் இம்மாதம் 12-ந் திகதி (27-8-60) ஆரம்பமாகின்றன. பத்து தினங்கள் தொடர்ந்து நடைபெறும். இவ்விழாக்கள் தீர்த்தம், திருவூஞ்சல் என்னும் நிகழ்ச்சிகளுடன் முடிவடையும்.

அம்பாள் விக்கிரகம் புதைபொருளாய்க் கண்டெடுக்கப்பட்ட இடத்தில் கட்டப்பட்ட இவ்வாலயத்தின் கும்பாபிஷேகம் 1958-ம் ஆண்டு ஆவணி மாதம் நடைபெற்றது. அதுமுதற்கொண்டு பிரதிவருடமும் விழாக்கள் சிறப்பாக நடைபெற்று வருவது இங்கு குறிப்பிடத்தக்கது.

யாழ்ப்பாணம் சைவபரிபாலனசபையாருக்காக, வண்ணார்பண்ணை காங்கேசன்துறை வீதி 450-ம் இலக்கத்திலுள்ள, சைவப்பிரகாச யந்திரசாலையில், யாழ்ப்பாணம் நாவலர்வீதி, 209ம் இலக்கத்தில் வசிக்கும் திரு. ஐயம்பிள்ளை சின்னத்துரை அவர்களால் 26-8-1960 வெள்ளிக்கிழமை அச்சிட்டு வெளியிடப்பெற்றது.
ஆசிரியர்: நா. சிவப்பிரகாசம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org